# ஆலோசனை

## பதிவு செய்யப்படாத மூட்டைப்பூச்சி கட்டுப்பாட்டு பொருட்களை பயன்படுத்த வேண்டாம் என ஹெல்த் கனடா கனேடியர்களை எச்சரிக்கிறது

**பிப்ரவரி 27, 2015**
**உடனடி வெளியீட்டுக்கு**

**பிரச்சினை:**

பிப்ரவரி 23 ல், போஸ்ஃபீன் (phosphine) பூச்சிக்கொல்லி என தோன்றுகின்ற ஒரு வெளிப்பாட்டினால் ஒரு குழந்தையின் மரணம்  மற்றும் பிற குடும்ப உறுப்பினர்களின் கடுமையான காயம் பற்றி ஹெல்த் கனடா அறிய வந்துள்ளது. இந்த சம்பவம் விளைவாக ஓர் இரண்டாவது குழந்தையும் பின்னர் இறந்துள்ளார். மனிதர்கள் மற்றும் மிருகங்களுக்கு அதிக நச்சுத்தன்மையுள்ள இந்த பூச்சிக்கொல்லி, தனிப்பட்ட பயன்பாட்டிற்கு வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு குடியிருப்புகளில் மூட்டைப்பூச்சிகளை கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. கனடாவில், போஸ்ஃபீன் பூச்சிக்கொல்லிகள் சரியான பூச்சிக்கொல்லி பயன்பாட்டு சான்றிதல் அல்லது உரிமம் வைத்திருக்கும் தனிப்பட்ட நபர்களுக்கு மட்டுமே விற்க முடியும். இவை மூட்டைப்பூச்சிகளின் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படவில்லை. போஸ்ஃபீன் வெளிப்பாட்டினால் ஏற்படும் சுகாதார பாதிப்புகள் கடுமையான காயங்கள் அல்லது மரணத்தை உள்ளடக்கியிருக்கலாம்.

மூட்டைப்பூச்சிகளின் கட்டுப்பாட்டிற்கு ஓசோன் உற்பத்திகள் (ஓசோன் எரிவாயு உற்பத்தி இயந்திரங்கள்) தொடர்புடைய ஏனைய சம்பவங்கள் பற்றியும் ஹெல்த் கனடா அறியும். ஓசோன் உற்பத்தி இயந்திரங்கள் பயன்பாட்டுக்கு பாதுகாப்பானவை அல்ல. இருமல், மார்பு வலி, மூச்சு திணறல், மற்றும் கண்கள், மூக்கு மற்றும் தொண்டை எரிச்சல் உள்ளிட்ட சுவாச பிரச்சனைகளை ஏற்படுத்தலாம்.

பிற நாடுகளிலிருந்து இறக்குமதி அல்லது வெளிநாட்டு பயணம் செய்யும் போது பெறப்பட்ட பதிவு செய்யப்படாத பூச்சி கட்டுப்பாட்டு பொருட்களை பயன்படுத்துவதன் தீவிர ஆபத்தைப் பற்றி ஹெல்த் கனடா எச்சரிக்கின்றது. தயாரிப்பு முத்திரைகளில் கோடிட்டுள்ள வழிமுறைகளின்படி மட்டுமே பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்த வேண்டும் என்று கனேடியர்களை இந்தத் துறை நினைவூட்டுகிறது.

## யார் பாதிப்படைகிறார்கள்:

தங்கள் இருப்பிடங்களில் மூட்டைப்பூச்சி பிரச்சனைகளை கொண்டிருக்கின்ற கனேடியர்கள்.

## பயனீட்டாளர்கள் என்ன செய்ய வேண்டும்*

மூட்டைப்பூச்சிகளை அழிப்பது மிகவும் கடினம். ஒரு மூட்டைப்பூச்சி பீடிப்பை கையாள்வதற்கு ஓர் உரிமம் பெற்றுள்ள பூச்சி கட்டுப்பாட்டு நிபுணரை படியமர்த்துவதை ஹெல்த் கனடா  தீவிரமாக பரிந்துரைக்கிறது. பூச்சிகளை அழிப்பவர்கள் அல்லது பூச்சி கட்டுப்பாட்டு நிர்வகிப்பாளர்களின் தொடர்பு விவரங்களுக்கு கனேடிய பூச்சி நிர்வகிப்பு நிறுவனம் (Canadian Pest Management Association)  அல்லது மஞ்சள் பக்கங்களில் அல்லது கனடா411. ca யில் காணலாம்.

மூட்டைப்பூச்சிகள் கொண்டுள்ள கட்டிட குடியிருப்போர் உடனடியாக வீட்டு உரிமையாளருக்கு தெரிவிக்க வேண்டும் மேலும் இந்த பீடிப்பை கையாள்வது பற்றி ஒரு பொது சுகாதார அதிகாரியுடன் பேச வேண்டும்.

உரிமம் பெற்ற முட்டைப்பூச்சி கட்டுப்பாட்டு நிர்வகிப்பாளரை பணியமர்த்துவதோடு, மூட்டைப்பூச்சி பிரச்சனையை எதிர்நோக்குகின்ற யாரேனும் ஆவியில் வேக வைத்தல், கழுவுதல் மற்றும் வீட்டு பொருட்களை வீசுதல் போன்ற உடல்ரீதியான  கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஹெல்த் கனடா ஆலோசனை வழங்குகிறது.

பொதுவாக, பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்த தேர்வு செய்வோர் இந்த பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை பின்பற்ற வேண்டும்:

- ஹெல்த் கனடாவினால் பதிவு செய்யப்பட்ட பூச்சிக்கொல்லிகளை மட்டும் அதன் தயாரிப்பு முத்திரைகளில் பணிக்கப்பட்டுள்ளபடி பயன்படுத்த வேண்டும்.

- பூச்சிக்கொல்லிகளை வாங்குவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு முன் உங்கள் சூழ்நிலைக்கு எந்தப் பொருட்கள் மிக ஏற்றவை மேலும் அந்தப் பொருளை எவ்வாறு பாதுகாப்பாக பயன்படுத்துவது என தயாரிப்பு முத்திரையை கவனமாக படிக்கவும்.
- பூச்சிக்கொல்லி தயாரிப்பு முத்திரைகளில் குறிப்பிட்டு சொல்லப்பட்டிருந்தாலேயொழிய மனிதர்கள், வளர்ப்பு பிராணிகள் அல்லது படுக்கைகளில் பயன்படுத்த வேண்டாம். உதாரணத்துக்கு, படுக்கை சட்டங்களில் பயன்படுத்துவதற்கு பதிவு செய்யப்பட்ட பூச்சிக்கொல்லிகள் மெத்தைகளில் அல்லது ஸ்பிரிங் பெட்டிகளில் பயன்படுத்த முடியாது.
- வீட்டுக்கு வெளியே பயன்படுத்தும் பூச்சிக்கொல்லிகளை வீட்டினுள் பயன்படுத்த வேண்டாம்.
- குழந்தை தொட்டில்கள், விளையாட்டு குடில்கள், அல்லது விளையாட்டுப் பொருட்களில் பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்த வேண்டாம்.
- வீட்டில் செய்யப்பட்ட பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்த வேண்டாம். அவை பார்ப்பதற்கு எளிமையானதாகவும் பாதுகாப்பானதாகவும் தோன்றினாலும், வீட்டில் செய்யப்பட்ட பல பூச்சிக்கொல்லிகள் செய்வதற்கும் பயன்படுத்துவதற்கும் ஆபத்தானதாகலாம். அவை உங்களையும் உங்கள் குடும்பத்தையும் பாதிக்கலாம்.
- பூச்சிக்கொல்லிகள் மற்றும் பிற இரசாயனங்களை வெளி நாடுகளில் வாங்கி கனடாவிற்கு இறக்குமதி செய்வதால் ஏற்படக்கூடிய கடுமையான சுகாதார அபாயங்களை கருத்தில் கொள்ளவும். இது சட்ட விரோதமானதாகலாம் மேலும் அமலாக்க நடவடிக்கையையும் ஏற்படுத்தலாம்.

## ஹெல்த் கனடா என்ன செய்கிறது:

ஹெல்த் கனடாவின் பூச்சிக்கொல்லி மேலாண்மை ஒழுங்குமுறை நிறுவனம் மூட்டைப்பூச்சிகளின் கட்டுப்பாடு தொடர்பான பாதுகாப்பு சம்பவங்களை கண்காணித்து தேவையான அமலாக்க நடவடிக்கைகளை எடுக்கும். இந்தத் துறை பூச்சிக்கொல்லிகளின் பாதுகாப்பான பயன்பாடு மற்றும் எவ்வாறு வீட்டில் பூச்சிகளை சரியாக கட்டுப்படுத்துவது பற்றிய ஆலோசனைகளை கனேடியர்களுக்கு தொடர்ந்து வழங்குகிறது.

ஒரு பூச்சிகொல்லி பொருளை பதிவு செய்வதற்கு முன்னர், அந்தப் பொருள் கண்டிப்பான சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் தரங்களுக்கு ஏற்றது மற்றும் மதிப்புள்ளது என்பதை உறுதி செய்வதற்கு ஹெல்த் கனடா ஓர் அறிவியல் அடிப்படையிலான மதிப்பீடு நடத்துகிறது. ஒரு பொருளின் பயன்பாடு மனித சுகாதாரத்துக்கு அல்லது சுற்றுச்சூழலுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத ஆபத்துகளை ஏற்படுத்துவதாக இருந்தால், அந்தப் பயன்பாட்டுக்கு கனடாவில் அது பதிவு செய்யப்படாது.

பூச்சிக்கொல்லி பொருட்களை பதிவு செய்கின்ற போது, குழந்தைகள் மற்றும் சிறுவர்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், மற்றும் முதியோர்கள் போன்ற பாதிப்படையக்கூடிய குழுக்களுக்கு ஹெல்த் கனடா சிறப்பு கவனம் செலுத்துகிறது. பாதிப்படையக்கூடியவர்களை பாதுகாப்பதற்கு கடுமையான சுகாதார மற்றும் பாதுகாப்பு தரங்கள் உள்ளன.

## கூடுதல் தகவலுக்கு:

பூச்சிக்கொல்லி பயன்பாடு மற்றும் கட்டுப்பாடு குறித்த கூடுதல் தகவலுக்கு, பூச்சி மேலாண்மை தகவல் சேவையை 1-800-267-6315 ல் தொடர்பு கொள்ளவும்.

## தொடர்புடைய ஹெல்த் கனடாவின் உள்ளடக்கம்:

மூட்டைப்பூச்சிகள் – அவை யாவை?

மூட்டைப்பூச்சிகள் – நான் எவ்வாறு பீடிப்பை தவிர்ப்பது?

மூட்டைப்பூச்சிகள் – எவ்வாறு நான் அவற்றை அழிப்பது?

மூட்டைப்பூச்சிகள் – அவை திரும்ப வராமல் இருப்பதை நான் எவ்வாறு நிச்சயப்படுத்திக்கொள்வது?

மூட்டைப்பூச்சிகள் – பிரயாணம் செய்கின்ற போது நான் எவ்வாறு அவற்றை தவிர்ப்பது?

மூட்டைப்பூச்சிகள் – கூடுதல் தகவலுக்கு நான் எங்கே செல்வது?

ஒரு பூச்சிக்கொல்லி சம்பவத்தை அறிவிக்கவும்



**ஊடக கேள்விகள்:**

ஹெல்த் கனடா

(613) 957-2983

*Également disponible en français*

**பொதுமக்கள் கேள்விகள்:**

(613) 957-2991

1-866 225-0709